IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.6 /2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw8 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **ரவிச்சந்திரா** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2023

நான் தற்பொழுது விஸ்வநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பயர் ஆபிசில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மச்சான் மகள் ஆவார். எதிரிகளை தெரியும். 1வது எதிரி அ.சா.1 ஐ திருமணம் செய்தார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் வெற்றிலையூரணி கிராமத்திற்கு துஸ்டிக்காக சென்றேன். 1வது எதிரி வீட்டில் கூட்டமாக இருந்தது. நான் சொந்தக்காரங்களிடம் என்னவென்று கேட்டேன். 1வது எதிரிக்கு திருமணம் நடந்ததாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

6.6.2019ம் தேதி நான் 1வது எதிரியின் ஊருக்கு துஸ்டிக்கு செல்லும்போது 1வது எதிரிக்கு நடந்த திருமணம் 2வது திருமணம் என்று தெரிந்து கொண்டேன். விஸ்வநத்தத்தில் உள்ள மகாலட்சுமியுடன் தான் 2வது திருமணம் நடந்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் இந்த சம்பவத்தை அ.சா.1க்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்றும், பின்பு அ.சா.1 எதிரியின் வீட்டிற்கு வந்து கேட்டபோது 1வது எதிரி மற்றும் அங்கிருந்த எதிரிகள் அ.சா.1ஐ பார்த்து தேவடியா என்று அசிங்கமாக பேசினார் என்றும், இங்கிருந்து போய்விடு இல்லை கொலை செய்துவிடுவேன் என்று சொன்னார் என்றும், 1வது எதிரி கேட்டதுபோல் 50 பவுன் நகையும், ரூ.5 லட்சம் பணமும் தராததால் இரண்டாவது திருமணம் செய்துவிட்டதாக அ.சா.1டம் சொல்லியுள்ளார் என்றும், இதற்கு மற்ற எதிரிகள் உடந்தையாக இருந்தார்கள் என்றும், பின்னர் இதுசம்பந்தமாக அ.சா.1 போலிசில் புகார் அளித்தார் என்றும், போலிசார் விசாரணையில் நான் இது குறித்து சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டபடி தற்போது சிலவிசயங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.6 /2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw9 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திலகராஜ்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.01.2023

நான் தற்பொழுது விஸ்வநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர். எதிரிகளை தெரியும். 1வது எதிரி அ.சா.1 ஐ திருமணம் செய்தார். பின்னர் இரண்டாவது திருமணமாக விஸ்வநத்தத்தில் உள்ள மகாலட்சுமி என்பவரை திருமணம் செய்தார். இரண்டாவது மனைவி தற்போது 1வது எதிரியுடன் இல்லை. அ.சா.1 ம் தற்போது 1ம் எதிரியிடம் சண்டை போட்டுவிட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார். 10.06.2019 ம் தேதி காலை 11 மணியளவில் 1வது எதிரியின் வீட்டில் அ.சா.1 ம் எதிரிகளும் சண்டை போட்டனர். அ.சா.1 நான் இருக்கும் போது ஏன்

வேறு திருமணம் செய்தீர்கள் என்று சண்டை போட்டார். அவர்களும் சண்டை போட்டுவிட்டு சென்றுவிட்டனர். அ.சா.1ன் வீட்டில் ஆஜர் எதிரிகள் அனைவரும் இருந்தனர். போலீஸ் விசாரணையில் இதையே சொன்னேன்.

குறுக்குவிசாரணை

10.06.2019ம் தேதியன்று வெற்றிலையூரணி கிராமத்திற்கு எதற்காக என்ன வேலைக்காக சென்றேன் என்றால் உறவினர் இறப்பிற்காக சென்றேன். அன்று என்ன கிழமை என்றால் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் இல்லை. நான் வெற்றிலையூரணி கிராமத்திற்கு உறவினரை பார்ப்பதற்காக சென்றிருந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. இறப்புக்கு போய்விட்டு உறவினரை பார்த்துவிட்டு வந்தேன். அ.சா.1 சுலோச்சனா எனக்கு என்ன உறவு என்றால் மாமா மகள் ஆவார். அ.சா.1க்கும் எனக்கும் திருமணம் நடத்துவதற்காக பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் சரியல்ல. 10.06.2019ம் தேதியன்று நான் வெற்றிலையூரணி கிராமத்திற்கு செல்லவில்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதாலும் அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1ம் 1ம் எதிரியும் எனக்கு உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1க்கும், 1ம் எதிரிக்கும் நடந்த திருமணத்திற்கு சென்றிருந்தேனா என்றால் செல்லவில்லை ஆனால் திருமணம் நடந்தது தெரியும். அந்த திருமணம் என்ன ஆனது என்பது குறித்தோ, அ.சா.1 எதிரிகள் மீது எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1க்கும், 1வது எதிரிக்கும் நடந்த திருமணம் ஊர்ஜிதத்தில் உள்ளதா அல்லது விவாகரத்து ஆனதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் விவாகரத்து ஆகவில்லை. எனக்கு முதல் திருமணம் மற்றும் இரண்டாவது திருமணம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், வேண்டுமென்றே எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.